நிலவின் குளிர்ச்சியான கருணைபோன்ற புத்த பகவானின் அன்பு, அவரை வணங்குபவர்களுக்கு தொடர்ந்து வளமையைக் கொடுக்கட்டும்.

நிலவிலிருந்து வரும் வெண்மையான ஒளி உலகத்தை சந்தோசப்படுத்துகிறது. பாண்டிய வம்சத்தால் சந்திரனின் களங்கமும் போய் விட்டது. சந்திரனின் கதிர்கள் ஹிமாலய மலையிலும், மலைநாட்டின் மலையிலும் விழுந்ததால் இம்மலைகள் பாண்டிய அரசின் வெற்றித் தூண்களாக மாறியிருக்கின்றன. இந்த இரு மலைகளிலும் செதுக்கி வைக்கப்பட்டது போன்று இருக்கும் மலை முகடுகள் யானையின் தந்தங்கள் போன்று ஜொலிக்கின்றன.

பாண்டிய நாட்டைச் சுற்றியுள்ள கடல்களின் அலைகள் நுரையுடன் கரையைத் தொடுவது, வேலைக்காரப் பெண் தன் எஜமானனுக்கு வெள்ளைச் சாமரம் வீசுவது போல உள்ளது. பாண்டிய குலத்தில் பிறந்த அரசர்களுக்கு, தாமரைப் பூவில் பிறந்த லட்சுமி தன் கைகளாலேயே விலையுயர்ந்த கற்களைப் பயன்படுத்தி கிரீடம் அமைத்துத் தந்துள்ளாள்.

பெரும் அசுவமேத யாகங்கள் செய்த முந்தைய பாண்டிய அரசர்கள் இப்போது உயிருடன் இல்லையென்றாலும், அவர்கள் நடத்திய பெரும் யாகங்களில் உண்டான, புகை மண்டலம் இன்றும் வானத்தை கருமேகமாக்கி வைத்துள்ளது. அந்த கரும்புகைகள் தான் அவ்வப்போது பாண்டி நாட்டைச் சுற்றியுள்ள நான்கு கடல்களிலிருந்தும் நீரைக் கவர்ந்து, மழையாக தேவையான காலங்களில் பொழிந்து பாண்டிய நாட்டை வளம் குறையாமல் பார்த்துக் கொள்கின்றன.

விரிசினி குல அரசர்களான இவர்களது புகழ் பாண்டிய நாட்டின் மங்காத முத்துக்கள் போன்று காலங்காலமாக ஒளிரட்டும்.

பௌசா மாதத்தில் சந்திரன் மிருக சிருஷத்திலும், சூரியன், மகர ராசியிலும் இருக்கும் ஒரு வியாழக்கிழமை, அரசன் வரகுணன் நிலதானம் செய்துள்ளான் (இந்த நிலத்திற்கான விபரம், நான்கு எல்லைகள் இந்த இடத்தில் விரிவாகத் தரப்பட்டுள்ளன ).

இந்த நிலதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு வீரகோட்டா என்பவனுக்கு வழங்கப்படுகிறது. இந்த வீரகோட்டாவின் தொடர்





வெற்றிகளைப் பார்த்து, லட்சுமி தேவி இவன் கைகளையே தலையணையாகப் பாவித்து அவைகளின் மீது தலை வைத்து தூங்குகிறாள்.

அரசன் வரகுணன், அடுத்தவர்களுக்கு உதவுவதை மகிழ்வோடு செய்பவன். பக்தர்களின் நண்பன். தூக்கத்தில் கனவு கண்டாலும் தனது குடிமக்களின் நன்மையைப் பற்றி மட்டுமே கனவு காண்பவன்.

அரசன் வரகுணன் தனக்கு பின்வரும் அரசர்களுக்கு கீழ்க்கண்ட வேண்டுகோளை வைக்கின்றான்.

''பாண்டிய குலத்தின் சிறப்புமிக்க வம்சாவளி உங்கள் காலத்தில் அழியக்கூடாது.''

''யாதவ குலத்தில் பிறந்த பாண்டிய அரசனாகிய நான் தலைவணங்கி எனக்குப் பின்வரும் அரசர்கள், நண்பர்கள் பக்தர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.''

''நிலதானம் செய்யப்பட்ட இந்த நிலத்தை மனைவியைப் போல நெருக்கமாக பாதுகாத்துக் கொள்வீர்களாகுக. அடுத்தவர்களின் அபகரிப்பிற்கு இந்த நிலம் எந்த காலத்திலும் ஆட்படக்கூடாது. ஓ! மனிதர்களே! நல்ல செயலை நோக்கி மனதைச் செலுத்துங்கள். இறப்பின் கடவுள், தனது வாயை அகலத் திறந்து வைத்துக் கொண்டு, உங்களை விழுங்க, உங்களுக்கு அருகிலேயே நடமாடிக் கொண்டுள்ளான். இந்த இறப்புக் கடவுளுக்கு நன்மை செய்ய அவனது தந்தையான காலதேவன், உங்களது வாழ்நாட்களை குறைக்க மிக வேகமாக நடைபோட்டு வருகிறான். அவன் உங்களைப் பிடிப்பதற்குள் நல்ல காரியங்கள் செய்யுங்கள். கெட்ட காரியங்கள் செய்துவிடாதீர்கள். நன்மையே நடக்கட்டும்.''

படக் குறிப்பு :

திருநெல்வேலி மாவட்டம் ராஜாக்காள் மங்கலம் தொல்லியல் துறை அலுவலகத்தில் உள்ள 'தேவி'யின் 8 ஆம் நூற்றாண்டு சிற்பம்.